9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

105. சேலம், திருவாளர்கள் விஜய் கலர்ஸ் *1980-81* மற்றும் *1981-82* ஆகிய வருடங்களுக்குச் செலுத்த வேண்டிய வரி வேறுபாடு ரூ. *30,870/-*ஐ தள்ளுபடி செய்வது குறித்து, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் *23-12-1994*-ஆம் நாளிட்ட *399*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (*1959*-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

106. சேலம், திருவாளர்கள் ஸ்ரீவெங்கடேஸ்வரா கலர் கம்பெனி *1980-81* மற்றும் *1981-82* ஆகிய வருடங்களுக்குச் செலுத்த வேண்டிய வரி வேறுபாடு ரூ. *33,629*-ஐ தள்ளுபடி செய்வது குறித்து, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் *1-2-1995*-ஆம் நாளிட்ட *25*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (*1959*-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

107. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை (*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

108. 1992-93-ஆம் ஆண்டு தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை (*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைககப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

115. கோரிக்கை எண் *27*--ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, *1995-96*. (தமிழ், ஆங்கிலம்).

116. ஊரக வளர்ச்சி பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், *1995-96*. (தமிழ், ஆங்கிலம்).